

மறைமலைநகர் நகராட்சி

மனைப்பிரிவு வரைபடம்

மாவட்டம்		செங்கல்பட்டு
வட்டம்	---	செங்கல்பட்டு
கிராமம்	---	திருக்கச்சூா
நில அளவை எண்கள்	---	**209/2B,3B,4A1,4A2,4A3,4B1,4B2,4B3,4C,4D, 4E,7A,**
	---	**211/1A,1B,**மற்றும்**211/3-** ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.
அளவு		1 : 1000
விண்ணப்ப எண்	---	YL3W3J2A/2024/TCP
குறிப்பு	---	திட்டமில்லாத பகுதி
மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	---	1.93ஏக்கர் (அ) 7802.0 ச.மீ
கோரிய மனைகள்	---	43
ஒதுக்கிய மனைகள்	---	41 + மனுதாரர் உபயோகம்1 (ம) 2
		(மனை எண் 6 முதல் 14 வரை EWS மனைகள் ஆகும்)
EWS மனைகள பரப்பு	---	645ச.மீ 13.4%

மனைப்பிரிவின் எல்லை ....

நிலையிலுள்ள சாலை ....

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஆவண எண்.18111/2024 நாள்.18.12.2024-இல் ஒப்படைக்கப்பட்ட பகுதி:

திறந்தவெளி ஒதுக்கீடு இடம்	....	497.0ச.மீ (10.20%)
தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பகுதி	....	30.2ச.மீ (0.62%)
பொது உபயோகம்	....	28.3 ச.மீ (0.58%)
உத்தேச சாலை பரப்பு	....	2994.0ச.மீ

		கட்டிட வரம்பு	மூலைமுடக்கு
7.2மீ முதல் 9மீ அகல சாலை வரை	....	1.5மீ	1.5மீ X 1.5மீ
12மீ அகல சாலைக்கு	....	3.0மீ	1.5மீ X 1.5மீ

நிபந்தனைகள்:-

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை எண்.18 (ம) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன்படி பூங்கா, சாலை ஒதுக்கீடுகள் (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனை உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவிற்கு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனை உட்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

6. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்.181 வீ.வ (ம) ந.வ - ன் நாள்:09.12.2020 Para 4(iV) - ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்

The local body would grant final approval / License to the layout and would release the final layout drawings to the applicant only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body. Further, the local body should intimate the fact of release of final layout drawing and the details of the amenities provided for the layout to the planning authority.

சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

இம்மனைப்பிரிவு தொடர்பாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆணை பெறப்படும்பட்சத்தில் அவ்வாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ம.வ./ ந.ஊ.உ.இ.(செ.மா.)எண்:293/ 2024 | வ

மறைமலை நகர் நகராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்
ந.க.எண் : 4267/2024/...
ம.அ.எண் : 03 / 2026-2027
செ.சீ.எண் : 971 / 2026-2027
நாள் : 21.04.2026
இம்மனைப்பிரிவுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது

City Planner,
Maraimalainagar Municipality.

Signature valid

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்,
செங்கல்பட்டு-1.